# நோன்பு தடை செய்யப்பட்ட நாட்கள் -2

## 6. தொடர்ந்து நோன்பு நோற்பது

இப்னுஉமர்(ரலியல்லாஹு அன்ஹு) அறிவிக்கிறார்கள்.
நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொடர்ந்து நோன்பு நோற்பதை தடுத்துள்ளார்கள். நாயகத் தோழர்கள் நாயகமே 'நீங்கள் தொடர் நோன்பு நோற்கிறீர்களே? என்று கேட்டபோது, நான் உங்களைப் போன்றவர் அல்லன். நிச்சயமாக நான் (இறைவனால்) உண்ணவும், பருகவும் வழங்கப்படுகிறேன்' என நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பதிலளித்தார்கள்.

**(ஆதாரம்: புகாரி எண்.1962)**

நீங்கள் தொடர் நோன்பு நோற்காதீர்கள் என நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தடுத்துள்ளார்கள் என அனஸ்(ரலியல்லாஹு அன்ஹு) அறிவிக்கிறார்கள்.

**(ஆதாரம்: புகாரி எண்.1961)**

தொடர் நோன்பு நோற்பதைக் குறித்து உங்களை நான் எச்சரிக்கை செய்கிறேன் என நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறும் கண்டனங்களை அபூஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு) அறிவிக்கிறார்கள்.

**(ஆதாரம்: புகாரி எண்கள்:1965,1966)**

## 7. ஆண்டு முழுவதும் நோற்பது

'எவர் காலமெல்லாம் நோற்றாரோ அவர் நோன்பு நோற்கவே இல்லை' என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹு) அறிவிக்கிறார்கள்.

**(ஆதாரம்:புகாரி,முஸ்லிம்)**

## 8. சந்தேகத்திற்குரிய நாட்களில் நோற்பது

'(பிறை பற்றிய) சந்தேகத்திற்குரிய நாளில் நோன்பு நோற்பவர் அபுல் காஸிம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு மாறு செய்தவராவார். என அம்மார் இப்னு யாஸிர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகிறார்கள்.

**(ஆதாரம்: புகாரி,முஸ்லிம்,திர்மிதி,இப்னுமாஜா, நஸயீ,தாரமீ)**

'பிறையைப்பார்த்து நோன்பு நோற்றுக் கொள்ளுங்கள்' என்ற நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கட்டளைக்கு மாறு செய்வது போன்றதாகும்.

**(ஆதாரம்: புகாரி)**

## 9. கணவன் ஊரிலிருக்கும்போது அனுமதியின்றி நோற்பது

கனவர் இருக்கும்போது அவருடைய அனுமதியின்றி ஒரு பெண் (உபரியான) நோன்பு நோற்பது ஆகுமானதல்ல. என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். அறிவிப்பாளர்: அபூஹுரைரா(ரலியல்லாஹு அன்ஹு)

**(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)**

('ரமளானைத்தவிர' என்ற வாசகம் அபூதாவூதில் அதிகப்படியாக உள்ளது)

## 10. மனைவிக்கும் குடும்பத்தினருக்கும் செய்ய வேண்டிய கடமைகளை செய்யாது நோன்பு நோற்பது

ஒருமுறை ஸல்மான் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் தம் இணைப்புச் சகோதரரான ஆபூதர்தா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களை சந்திக்கச் சென்றார். அங்கே அவரது மனைவி உம்மு தர்தாவை தலைவிரி கோலமாகவும் அழுக்கடைந்த ஆடை அணிந்த நிலையிலும் கண்டார். உஹ்களுக்கு என்னவாயிற்று எனக்கேட்ட

போது உமது சகோதரருக்கு இவ்வுலகில் எந்தத்தேவையுமில்லை என்று கூறி அவர் குடும்பத்தைத் துறந்து வணக்கத்திலும், நோன்பிலும் திழைத்திருப்பதை முறையிட்டார். சற்று நேரத்தில் அங்கு வந்த



அபூதர்தா(ரலியல்லாஹுூ அன்ஹுூ) அவர்கள் ஸல்மான்(ரலியல்லாஹுூ அன்ஹுூ) அவர்களுக்காக உணவு தயாரித்து உண்ணுமாறு கூறினார். அதற்கவர் நான் நோன்பு வைத்திருக்கிறேன். என்றார். உடனே ஸல்மான்(ரலியல்லாஹுூ அன்ஹுூ), நீர் உண்ணாமல் நான் உண்ணமாட்டேன் எனக் கூறியதும். அபூதர்தா ரலியல்லாஹுூ அன்ஹுூ வும் உண்டார். இரவானதும் அபூதர்தா(ரலியல்லாஹுூ அன்ஹுூ) நின்று வணங்கத் தயாரானார். அப்போது ஸல்மான்(ரலியல்லாஹுூ அன்ஹுூ) அவர்கள், உறங்குவீராக, என சென்னதும் அவர் உறங்கினார். பின்னர் தூங்கிவிட்டு இரவின் பிற்பகுதியில் எழுந்து இருவரும் தொழுதனர்.

பிறகு அபூதர்தா(ரலியல்லாஹுூ அன்ஹுூ) அவர்களிடம் ஸல்மான்(ரலியல்லாஹுூ அன்ஹுூ) அவர்கள் கூறினார்கள்:

‘நிச்சயமாக நீர் உம் இறைவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் இருக்கின்றன. உமக்கு நீர் செய்யவேண்டிய கடமைகள் இருக்கின்றன. உம் குடும்பத்தினருக்குச் செய்ய வேண்டிய கடமைகள் இருக்கின்றன. அவரவருக்கச் செய்யவேண்டிய் கடமைகளை நிறைவேற்றுவீராக. என்று

பின்னர் அபூதர்தா(ரலியல்லாஹுூ அன்ஹுூ) அவர்கள் நடந்த விசயத்தை நபி(ரலியல்லாஹுூ அன்ஹுூ) அவர்களிடம் வந்து கூறினார். இதைக் கேட்ட நாயகம் ஸல்லல்லாஹுூ அலைஹி வஸல்லம் அவர்கள் ‘ஸதக்க ஸல்மான் – ஸல்மான் உண்மைக் கூறினார்’ என்றுரைத்தார்கள். (அறிவிப்பாளர்:அபூஜுஹைஃபா(ரலியல்லாஹுூ அன்ஹுூ)

**(ஆதாரம்: புகாரி எண்.1968)**

கணவனோ மனைவியோ அவரவர்களுக்குரிய கடமையச் செய்யாது உபரியான வணக்கங்களிலோ நோன்புகளிலோ ஈடுபடுவது மார்கத்தில் கண்டிப்பாக தடுக்கப்பட்டுள்ளது.

**குடும்பங்களைப் பிரிந்து வெளிநாடுகளில்வசிப்போருக்கோர் ஓர் எச்சரிக்கை**

இன்று குடும்பங்களை விட்டு விட்டு மாதக்கணக்கில் ஒரு மாதம், நான்கு மாதங்கள் என பிரச்சாரத்திற்காக செல்வதும் இதன் மூலம் தடை செய்யப்படுகிறது. இதனால் தான் கலீபா உமர் பாருக்(ரலியல்லாஹுூ அன்ஹுூ) அவர்கள் தம் படைவீரர்கள் நான்கு மாதங்களுக்கு மேல் குடும்பத்தை விட்டும் பிரிந்திருப்பதற்கு தடை விதித்தார்கள்.

(வெளி நாடுகளில் வேலை பார்ப்போர் பெருளாதார நெருக்கடியால் குடும்பத்தை விட்டும் பிரிந்திருக்க நேர்ந்தால் கணவன் மனைவி இருவரது கற்புக்கும் பாதுகாப்புக்கும் உரிய உத்தரவாதமிருந்தால் மனைவியைப் பிரிந்திருக்க அனுமதிக்கப்படுகிறது. குடும்பத்தினரின் சூழ்நிலைகளையும் கட்டுப்பாடான நிலைமைகளையும் உடல் ரீதியான தேவைகளையும் தெரிந்து கொள்ளும் தொலை பேசித் தொடர்புகளும் இன்டர்நெட் வசதி வாய்ப்புகளும் இன்றைய காலத்தில் உள்ளதால் குடும்பத்துடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்க முடியும். அல்லாஹ்வே யாவற்றிகும் போதுமானவன்.

www.bathusha.com
Tamil Islamic Online Radio 24h